FM முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

10 - ஆம்வகுப்பு மதுரை - தமிழ் - 31.07.23

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**பகுதி - I (மதிப்பெண்கள் -6)**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. இந்திய காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் பெறும் இடம்
   அ) ஐந்தாமிடம் ஆ) இரண்டாமிடம் இ) முதலிடம் ஈ) மூன்றாமிடம்
3. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்று கூறும் நூல்
   அ) காசிக்காண்டம் ஆ) கொன்றை வேந்தன் இ) புறநானூறு ஈ) குறுந்தொகை
4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்திக் காரணமாக அமைவது.
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

***பாடலைப் படித்து விடை தருக.***

*"முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்".*

5. இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
   அ) பள்ளிப் பறவைகள் ஆ) கனிச்சாறு இ) நூறாசிரியம் ஈ) மகபுகுவஞ்சி
6. முந்தை, விந்தை எனும் சொற்களில் அமைந்துள்ள தொடை நயம் எது?
   அ) முரண் ஆ) மோனை இ) எதுகை ஈ) இயைபு

**பகுதி - 2 (மதிப்பெண்கள் - 12) (பிரிவு - 1)**

**குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்). 10 ஆவது வினா கட்டாய வினா.**

7. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***
   அ) 'பாட்டுக்கொரு புலவன்' எனப் பாராட்டப்படுபவர் பாரதியார்.
   ஆ) காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.
8. 'மா அல்' - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
9. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
10. "முயற்சி" எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**பிரிவு - 2**

**விடை தருக. (மூன்று மட்டும்).**

11. ***பழமொழிகளை நிறைவு செய்க.***
    அ) உப்பிட்டவரை ............ . ஆ) அளவுக்கு ................ .
12. ***கீழ்க்காணும் சொற்களில் அமைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு எழுதுக.*** அ) எழுகதிர் ஆ) கீரிபாம்பு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

13. கலைச் சொற்களைத் தமிழில் எழுதுக.
அ) Ancient Literature ஆ) Discussion
14. இரு சொற்களையும் ஒரே தொடரில் எழுதுக.
அ) தொடை - தோடு ஆ) மலை - மாலை

## பகுதி - 3(மதிப்பெண்கள் - 9)

சுருக்கமான விடை தருக. (மூன்று மட்டும்). வினா எண். 18 கட்டாய வினா.

15. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.
16. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
17. 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.
18. 'விருந்தினராக ஒருவன் வந்து' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பகுதி - 4 (மதிப்பெண்கள் - 15)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 15

19. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
20. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



22. மொழிபெயர்க்க.
Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamil who have defined grammer for language have also defined grammer for life. Tamil cutlture is rooted in the life styles of Tamils throughout India, SriLanka, Malasiya, Singapore, England and World wide.

## பகுதி - 5 (மதிப்பெண்கள் - 8)

விரிவான விடை தருக.

23. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான வரைக் குறிப்புகளை எழுதுக. *(அல்லது)*
ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பபாட்டினை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப் பகுதி கொண்டு விவரிக்க.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com